**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்: 167** **நாள் : 24.10.2018**

**பெருநகர சென்னை மாநகராட்சி பொதுசுகாதாரத்துறை சார்பாக நடைபெற்ற டெங்கு ஒழிப்பு மற்றும் கை கழுவும் முறை குறித்து விழிப்புணர்வு முகாமில் கலந்து கொண்ட 800 மாணவ, மாணவியர்கள் சுகாதார தூதர்களாக அறிவிக்கப்பட்டு அடையாள அட்டை வழங்கப்பட்டது.**

பெருநகர சென்னை மாநகராட்சி, பொதுச்சுகாதாரத்துறை சார்பாக, அடையாறு மண்டலம், குமார ராணி மீனா முத்தையா கல்லூரியில் டெங்கு காய்ச்சல் மற்றும் முறையாக கை கழுவும் முறை குறித்து விழிப்புணர்வு முகாம் இன்று (24.10.2018) நடைபெற்றது. இந்த விழிப்புணர்வு முகாமை பெருநகர சென்னை மாநகராட்சி துணை ஆணையர் (சுகாதாரம்) திரு.பி.மதுசுதன் ரெட்டி, இ.ஆ.ப., அவர்கள் தொடங்கி வைத்தார்.

குமார ராணி மீனா முத்தையா கல்லூரி மற்றும் பள்ளியைச் சேர்ந்த 800 மாணவ, மாணவியர்களுக்கு டெங்கு காய்ச்சல் எவ்வாறு உருவாகிறது, அதன் அறிகுறிகள், டெங்கு காய்ச்சலை பரப்பும் ஏடிஸ் வகை கொசுக்களின் வாழ்க்கை சுழற்சி, அவை உருவாகாமல் தடுக்கும் முறைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. கொசுக்களின் பருவங்களான கொசுப்புழு, கூட்டுப்புழு, வளர்ந்த கொசு முதலியவை கண்காட்சியாக வைக்கப்பட்டு மாணவர்களுக்கு விளக்கப்பட்டது.

உலக சுகாதார நிறுவனத்தின் அறிக்கையின்படி முறையாக சோப்பு உபயோகித்து கைகழுவதன் மூலம் 50% வயிற்றுப்போக்கு, 25% நிமோனியா காய்ச்சல், டைஃபாய்டு காய்ச்சல், மஞ்சள் காமாலை, சாதாரணமான சளித்தொல்லை, சுவாச தொற்றுநோய்கள், பன்றிக்காய்ச்சல், காலரா, வயிற்றுப் பூச்சிகள், தோல் மற்றும் கண் சம்பந்தப்பட்ட நோயிலிருந்தும் பாதுகாக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இம்முகாமில் கலந்து கொண்ட மாணவ, மாணவியர்களுக்கு கை கழுவும் முறை குறித்து செயல்முறை விளக்கம் அளிக்கப்பட்டது.

மேலும், அனைத்து மாணவ, மாணவியர்களும் பெருநகர சென்னை மாநகராட்சியின் சுகாதார தூதர்களாக அறிவிக்கப்பட்டு, பெருநகர சென்னை மாநகராட்சி துணை ஆணையர் (சுகாதாரம்) அவர்களால், சுகாதார தூதர் அட்டை வழங்கப்பட்டது. இந்த அடையாள அட்டையை வைத்திருக்கும் மாணவ, மாணவியர்கள் தங்களது வீடு, தெரு, பள்ளி, கல்லூரி உள்ளிட்ட பகுதிகளில் கொசு உருவாகாமல் விழிப்புணர்வு ஏற்படுத்துவதாக உறுதி அளித்தனர். இறுதியில் மாணவ, மாணவிகள் அனைவரும் டெங்கு காய்ச்சல் தடுப்பு உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில், பெருநகர சென்னை மாநகராட்சி சுகாதார கல்வி அலுவலர் முனைவர்.டி.ஜி.சீனிவாசன், கல்லூரி, பள்ளி முதல்வர்கள் டாக்டர் விஜயஸ்ரீ, விஜயவள்ளி, பசுமைப்படை ஒருங்கிணைப்பாளர் தங்கராஜ், சுகாதார ஆய்வாளர் S.சுவாமிநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**